பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 29 | செவ்வாய்க்கிழமை | 11.06.2024 | அதிர்வு 315

## தமிழீழம் வேண்டும்!

### மோடியிடம் மதுரை ஆதீனம் கோரிக்கை



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழர்களுக்காகத் தமிழீழம் கேட்பேன் என்று மதுரை ஆதீனம் கோரிக்கை 06



# 13 ஐ முழுமையாக அமுல் செய்வேன்!

## யாழில் நேற்று தமிழரசுக் கட்சியினருடனான சந்திப்பின் பின்னர் சஜித் திட்டவட்ட அறிவிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

அரசமைப்பின் பிரகாரம் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அனைத்தையும் நடைமுறைப்படுத்துவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வடக்குக்கு 5 நாள் பயணமாக வருகை தந்துள்ள இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று இரவு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரையும் மாட்டீன் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். 06

## அதிகாரப் பகிர்வு சம்பந்தமான உங்கள் நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்துங்கள்

### சஜித்திடம் சுமந்திரன் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“அதிகாரப் பகிர்வு சம்பந்தமான உங்களுடைய நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாகத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் விபரமாக எடுத்துச் சொல்லுங்கள்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் தான் நேரில் கோரிக்கை விடுத்தார் என்று தமிழரசுக் கட்சியின் 06



நேற்று முன்னிரவு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு இடையிலான பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் சுமார் இரண்டரை மணி நேரம் நீடித்தன.

“காத்திரமான – பயனுள்ள – கலந்துரையாடல்” என்று கூட்டத்தின் பின்னர் புறப்படும் போது அக்கலந்துரையாடலில் சஜித் பிரேமதாஸவுடன் பங்கு பற்றிய இரான் விக்கிரமரத்தின் எம்.பி. குறிப்பிட்டார்.

13 இன் நடைமுறையாக்கம் பற்றிப் பேசும்போது தமிழரசுத் தரப்பில் 06



# தமிழரசுக் கட்சியுடன் சஜித் விசேட சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் இடையே விசேட சந்திப்பு நடைபெற்றது.

யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இரவு இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன மற்றும் அக்கட்சியின் யாழ். மாவட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெறும் நோக்குடன் சஜித் பிரேமதாஸ மேற்படி சந்திப்பை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.









# வனவளத் திணைக்களத்தால் 235 ஏக்கர் காணி ஓமந்தை பனிக்கர்புளியங்குளத்தில் விடுவிப்பு!

(கே.வசந்தன்)

ஓமந்தை, பனிக்கர் புளியங்குளத்தில் 235 ஏக்கர் காணி வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

ஓமந்தை, பனிக்கர் புளியங்குளம் பகுதிக்கு விஜயம் செய்து காணிகளை பார்வையிட்ட பின் நேற்று கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

பனிக்கர் புளியங்குளம் பகுதியில் வாழ்ந்த மக்கள் பலர் வாழ்வாதார பயிற்செய்கைக்கு நீண்ட காலமாக காணியின்றி அவதிப்பட்டனர். இந்நிலையில் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் என்ற வகையில் வனவளத் திணைக்களத்துடன் பல தடவை பேசி ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய தற்போது அம் மக்களுக்கான காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தை, பனிக்கர் புளியங்குளம் குளத்திற்கான காணி உட்பட மக்களின் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைக்காக 235 ஏக்கர் நிலம் வனவளத் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக வருகை தந்து பார்வையிட்டு அதனை விடுவித்துள்ளனர். இதன் மூலம் இப்பகுதியில் வாழும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஓர் ஏக்கர் காணி வாழ்வாதார நடவடிக்கைக்காக வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.







# ஆடுகளை மிருகவதை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூரில் சிறிய மரப் பெட்டி ஒன்றில் 3 ஆடுகளை அடைத்து வைத்து மோட்டர் சைக்கிள் ஒன்றில் எடுத்துச் சென்ற ஒருவரை மிருகவதை குற்றச்சாட்டில் நேற்றுத் திங்கட்கிழமை தாம் கைது செய்துள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடியில் இறைச்சிக்காக 3 ஆடுகளை வாங்கி அதனை மரப்பெட்டி ஒன்றில் கட்டி அடைத்துக் கொண்டு மோட்டர் சைக்கிள் ஒன்றில் ஏறாவூருக்கு நேற்றுப் பகல் எடுத்துச் சென்ற நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து

ஏறாவூர் பிரதேசத்தில் வைத்து பொலிஸார் அந்த மோட்டர்சைக்கிளை நிறுத்திச் சோதனையிட்டனர்.

இதன் போது ஆடுகளை சிறுய மரப் பெட்டியில் அடைத்து எடுத்துச் சென்ற 55 வயதுடைய ஏறாவூரைச் சேர்ந்தவரை மிருக வதை குற்றச்சாட்டில் கைது செய்தமையுடன் 3 ஆடுகளையும் மோட்டர் சைக்கிள் ஒன்றையும் மீட்டனர்.

கைது செய்தவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# ஆயிரம் பில்லியன் ரூபாவுக்கும் அதிக வரி நிலுவை; நாடாளுமன்றத்துக்கு சுருக்கமான அறிக்கை தயார்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்

ரூபா 1000 பில்லியனுக்கும் அதிகமான வரி பாக்கியை மீளப் பெறுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான சுருக்க அறிக்கையொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காகத் தயாராகியுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்

நிதி அமைச்சில் நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் வருவாயை வசூலிக்கத் தவறினர் எனஜ் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள போதிலும் உள்நாட்டு இறைவரி, சுங்கத் திணைக்களம் போன்றவை இந்த ஆண்டு இலக்கு வருவாயை மீறுவதற்கு ஏற்கனவே வேலை செய்துள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட சில அதிகாரிகளாலும் தனிப்பட்ட நபர்களாலும் இவ்வாறான தவறுகள் இடம்பெறுவது உண்மையான காரணமாக இருந்தலும், உத்தி



யோகத்தர்கள் ஒட்டுமொத்தமாக தமது பொறுப்பை முழுமையாக நிறைவேற்றியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இவ்வாறான வரிப் பாக்கிகள் ஏற்படுவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன எனக் குறிப்பிட்ட அமைச்சர், வரி மேன்முறையீட்டு நடைமுறை மற்றும் அரச நிறுவனங்களுக்கு அரசாங்கம் செலுத்த வேண்டிய வரித் தொகையும் இதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனர் தெரிவித்தார்.

அதன்படி, நிலுவைத் தொகையை மீட்பதற்காக தற்போதுள்ள நீதித்துறையை விரைவுபடுத்த எடுக்கு வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் இருந்து வசூலிக்க வேண்டிய நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சில வரி பாக்கிகள் சுமார் 25 வருடங்களாக நிலவும் பற்றாக்குறைகள் என தெரிவித்த அமைச்சர், அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விஞ்ஞான முறையிலான சுருக்கத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தாலும், அது தொடர்பான விரிவான அறிக்கை அடுத்ததாக வரும் ஒரு நாடாளுமன்ற அமர்வின் போது சமர்ப்பிக்க தயாராகி இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




# மண்டைதீவுக் கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல்

மண்டைதீவுக் கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர் நினைவாக அமைக கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றுது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மீனவர்களின் உறவினர் கள்,கிறிஸ்தவ மதகுருமார்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கொல்லப்பட்ட மீனவர்களுக்காக வழி பாடுகளில் ஈடுபட்டனர். அவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தினர்.

1986ஆம் ஆண்டு ஜ/ன் மாதம் 10ஆம் திகதி குருநகர், இறங்கு துறையில் இருந்து கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் 31 பேரும் மண் டைதீவு கடலில் வைத்து கடற் படையினரால் படுகொலை செய் யப்பட்டிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.










## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சி.வி.கே.சிவஞானம் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்

"13ஆம் திருத்தமே தமிழர்களைத் திருத்திப்படுத்த போதுமானது அல்ல. ஆகவே அதற்கு இணங்குவது என்பது பெரிய விவகாரமும் அல்ல. ஆனால் 13 அவது திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர் பல விடயங்கள் அதிலிருந்து பிடுங்கப்பட்டு விட்டன. அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டு விட்டன. அவற்றையெல்லாம் மீண்டும் கொண்டுவர வேண்டும்" – என்று சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்தியவற்றை சஜித் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டார் என்று தெரிகிறது.

அதற்கு மேல் இரண்டு விடயங்களை சஜித் பிரேமதாஸ தானாகவே சுட்டிக்காட்டினார். அவை கவனிக்கத்தக்கவை.

ஒன்று – சட்டத்தின் மூலம் எதைத் தந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி தேவை. நிதி இல்லாமல் வெறும் சட்டப் புத்தகத்தில் மாத்திரம் அதிகாரத்தைப் பகிர்வது பயனற்றது. பிரதானமாக நிதி அதிகாரங்களின் பகிர்வு குறித்துத் தெளிவான சிந்தனை – பார்வை – எங்களுக்கு உண்டு. அதற்கான திட்டம் வைத்திருக்கிறோம். நாம் பதவிக்கு வந்ததும் அதனை செயல்படுத்துவோம். பகிரப்படும் அதிகாரங்களின் நடைமுறையாக்கத்துக்கு இந்த நிதி அதிகாரங்கள் பெரிதும் உதவும்.

அடுத்தது – என்ன அதிகாரத்தை சட்டத்தில் தந்தாலும், அதற்கான நிதியை ஒதுக்கினாலும், அத்தகைய பரவலாக்கியஅதிகாரங்களைசம்பந்தப்பட்டஅமைப்புகள் பிரயோகிப்பதற்கு உகந்த சூழ்நிலை அவசியம். அதாவது, மக்களின் மன நிலையில் அவற்றை அங்கீகரித்து உள்வாங்கும் மனநிலை ஏற்படுவது மிக முக்கியம்.

அதிகாரப்பகிர்வுபற்றியகருத்துநிலைப்பாட்டை – அதன் நியாயத்தன்மையை – அதன் கட்டாயத்தை – மக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களையும் சமாந்தரமாக நாம் முன்னெடுக்க வேண்டும்.

அப்போதுதான் உருவாகும் இயல்பு நிலையும் புரிந்துணர்வும் நின்று, நிலைத்து, நீடிக்கும்.

– இப்படித் தமது எண்ணத்தை – திட்டத்தை – வெளிப்படுத்தி இருக்கின்றார் சஜித் பிரேமதாஸ.

எந்த சமரசம் முயற்சியையும், இணக்கத்தையும், புரிந்துணர்வையும், இனவாதத்தைக் கிளப்புவதன் மூலம் முறியடித்து விட முடியும் என்ற உடைந்து விடும்கள நிலைமையை சமாந்தரமாக மாற்றிக் கொண்டுதான் நல்லிணக்க நடவடிக்கையை நிலை நிறுத்த வேண்டும் என்று குட்டி லெக்சர் அடித்திருக்கின்றார் சஜித்.

காணி அதிகார பகிர்வு குறித்தும் அதையொட்டிய பிரச்சினைகளை விவரித்தும் மாவை சேனாதிராஜா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அங்கு தெரிவித்த கருத்துக்கள், ஒப்புக் கொண்ட விடயங்களை உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன் வையுங்கள். வெளிப்படையாக – பகிரங்கமாக – தெரிவியுங்கள். அவற்றின் அடிப்படையில் நாம் நிலைமையைப் பரிசீலிப்போம் என்று சுமந்திரன் குறிப்பிட்டிருக்கிறார்.

நேற்றைய சந்திப்பில் சஜித் பிரேமதாஸவெளிப்படுத்திய – பிரதிபலித்த – கருத்துக்கள் வரவேற்கத்தக்கவையாக இருந்தன. ஆனால் அதிகாரத்துக்கு வந்தால் இந்த நிலைப்பாட்டில்தான் அவர் தொடர்ந்தும் இருப்பாரா அல்லது வழமையான சிங்களத் தலைவர்கள் மாதிரி இனவாதப் பெரும் சமுத்திரத்துக்குள் அவரும் இறங்கி விடுவாரா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!

இன்று தமிழரசுக்காரர்கள் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுடன் பேசப்போகின்றனர்.

அவர் என்ன லெக்சர் வைக்கப் போகின்றாரோ தெரியவில்லை.

அவரின் லெக்சர் வடக்குக் கிழக்கை பிரித்த தங்களின் சாதனையில் இருந்து தொடங்கும் என்று நினைக்கிறேன்...!

## அரசமைப்பின் 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, "தமிழ் மக்களின் பிரச்சினைக்குத்தீர்வாக13ஐநடைமுறைப்படுத்துவேன் எனத் தெரிவித்துள்ளீர்கள். அது 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட வகையிலான தீர்வாக அமையுமா?" – என்று ஊடகவியலாளர்கள் கேட்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டம் அப்படியே நடைமுறைப்படுத்தப்படும். அதில் மைனஸூம் இன்றி, பிளஸூம் இன்றி முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்." – என்றார்.

## தமிழீழம் வேண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்வைத்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றதன் பிரகாரம் நரேந்திர மோடி மூன்றாவது முறையாகப் பிரதமராக பதவியேற்றுள்ளார்.

நரேந்திர மோடி மீண்டும் பிரதமரானமை குறித்து மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள கருத்தில்,

"இலங்கையில் இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தவர்களும் வெற்றி பெற்று விட்டார்களே என்ற வருத்தம் எனக்கு உள்ளது.

அதன் காரணமாகத்தான் அவர்களுக்கு மத்தியில் ஆட்சி செய்ய முடியவில்லை.

அதேநேரம், மோடி இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார். மோடிக்கு முக்கிய கோரிக்கையை முன் வைக்கின்றேன்.

ஈழத்தில் இருக்கும் மக்களைப் பாதுகாக்க தமிழீழம் உருவாக வேண்டும்.

மோடி பிரதமரானதில் எனக்கு மிக மகிழ்ச்சி. சீமானின் வெற்றியால் விடுதலைப்புலிகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சீமான் என்னிடம் தனி நாடு வேண்டும் எனக் கோரிக்கை வைக்க வேண்டும் எனக் கூறினார். அதனைத்தான் நானும் கூறுகின்றேன்." – என்று தெரிவித்துள்ளார்.

## அதிகாரப் பகிர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இரவு நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பில் கலந்துகொண்டு விட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் எங்களுடையதமிழரசுக்கட்சியினருடன்பேசவேண்டும் எனக் கோரியதன் அடிப்படையில் இன்று (நேற்று) சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எங்களுடைய கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நாங்கள் கலந்துகொண்டு தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பு சம்பந்தமாக இதன்போது எடுத்துரைத்தோம்.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக எங்களுக்கு இருக்கின்ற ஏமாற்றங்கள், நாங்கள் போதாது என்று சொல்லுகின்ற 13 ஆவது திருத்தத்தைக் கூட இப்போது இன்னமும் மோசமான நிலைக்குக் கடந்த கால அரசுகள் கொண்டு வந்து விட்டிருக்கின்றன.

கொடுத்ததையும் மீளப் பெறுகின்ற ஒரு சூழ்ச்சியின் காரணமாக இப்போது அது மிகவும் நலிவடைந்ததாகக் காணப்படுகின்றது. ஆகவே, 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவேன் என்று சொல்லுவதில் கூட இன்றைக்கு அர்த்தம் இல்லாமல் இருக்கின்றது என்பதைச் சஜித்திடம் தெளிவாக எடுத்துரைத்தோம்.

இதில் விசேடமாக வடக்கு மாகாண அவைத் தலைவராக இருக்கின்ற சி.வி.கே. சிவஞானம் மாகாண சபை அனுபவங்களையும், மாகாண சபை நிறுவனங்களையும் எடுத்துச் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளையும் விபரமாக எடுத்துக் கூறினார்.

இவற்றுக்கெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் பதிலளிக்கும்போது தன்னுடைய நோக்கு அதாவது முதலில் கிராமம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும், அதன் பிறகு நகரம், பிரதேச செயலகம், மாவட்டம், மாகாணம் கட்டியெழுப்பப்பட்டு அதற்குப் பிறகுதான் நாடு கட்டியெழுப்பப்படும் என்றும் தன்னுடைய கோட்பாட்டைப் பற்றி சொன்னார்.

அடிமட்டத்திலே இருக்கின்ற நிறுவனங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பது தன்னுடைய கோட்பாடு என்றும் அவர் கூறினார்.

இதில் விசேடமாக நிதிப் பகிர்வு என்ற விடயத்தையும் அவர் சொன்னார். அதாவது அதிகாரப் பகிர்வைக் கொடுத்துவிட்டு நிதிப் பகிர்வைச் செய்யாவிட்டால் அந்த அதிகாரப் பகிர்விலே எந்தவித பிரயோசனமும் இருக்காது என்றும், ஆகவே அது சம்பந்தமாக தாங்கள் விசேட கவனம் எடுப்பதாகவும் சொன்னார்.

நாட்டில் வாழுகின்ற மக்கள் மத்தியிலே அதாவது வெவ்வேறு இனங்கள் மத்தியிலே இருக்கின்ற பரஸ்பர நம்பிக்கையீனத்தை நாங்கள் சிறிது சிறிதாக இல்லாதொழிக்க வேண்டும், சேர்ந்து செயற்பட வேண்டும் என்கின்ற கருத்தையும் அவர் சொல்லியிருந்தார்.

இதில் நாங்கள் அவருக்கு சொல்லியிருக்கின்ற விடயம் என்னவெனில் இந்த நாடு நோக்கி அவர் சொல்லுகின்ற கருத்தியல்கள் நல்லவை. அவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், எங்களது தமிழ் மக்களின் அடையாளங்கள் பேணப்பட வேண்டும். தமிழ் மக்களது தாயகத்திலே வடக்கு – கிழக்கு இணைந்ததான ஒரு அலகிலே பூரண அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் மக்களுடைய எதிர்பார்ப்பு எனக் கூறியிருந்தோம்.

அவர் சொல்லுகின்ற மற்ற விடயங்கள் எல்லாம் நல்லவை. வரவேற்கத்தக்கவை. ஆனால், சில வேளைகளில்

07

# யார் ஆட்சிக்கு வந்தாலும் நாணய நிதிய ஒப்பந்தப்படித்தான் செயல்பட வேண்டும்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



“எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட ஆவணத்தை தயாரிக்கும் போது, யார் அரசாங்கத்தை நிர்வகித்தாலும், 2028 ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.”

– இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இதுவரை பல்வேறு தரப்பினரும் போராட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். இதன்படி, அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், உள்ளிட்ட அரசாங்க சபைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட சம்பளம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கான தீர்வுகளை பரிந்துரை செய்து, 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட ஆவணத்தில் முழுமையான தீர்வுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அரசாங்கத்திற்கு எத்தனை தேவைகள் இருந்தாலும் 2024 வரவு - செலவுத் திட்ட ஆவணத்தின் மூலம் கூடுதல் நிதி ஒதுக்கீடுகளைப் பெற முடியாது. கடந்த நான்கு தசாப்தங்களாக ஒரு அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களை மேற்கொள்வதற்குப் போதுமான வருமானம் இருக்கவில்லை என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

2023ஆம் ஆண்டு அனைத்து வகையான வரிகளையும் அதிகரித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1,550 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் மூலம் சுங்கத் திணைக்களம் 923 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது. மதுவரித் திணைக்களம் 169 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் 20 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளதுடன், வரி அல்லாத வருமானம் 219 பில்லியன் ரூபா கிடைத்துள்ளது. அத்துடன் 16 பில்லியன் ரூபா நன்கொடையாகக் கிடைத்துள்ளது. பல்வேறு வைப்பு நிதிகள் மூலம் 304 பில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது. இதன்படி, அனைத்து வழிகளிலும் பெறப்பட்ட மொத்த வருமானம் 3,201 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருமானங்கள் மூலம் அரசாங்கத்தின் அன்றாட செயற்பாடுகள், அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும போன்ற நலன்புரி கொடுப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான வட்டி என்பவற்றைச் செலுத்த வேண்டும். அதற்காக 2023ஆம் ஆண்டில் மட்டும் 4.3 டிரில்லியன் ரூபா செலவாகியுள்ளன.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, யார் அரசாங்கத்தை வழிநடத்தினாலும், அவர்கள் 2028 வரை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடன் ஒப்பந்தங்களைப் பேண வேண்டும். அதன்படி, 2025 ஆம் ஆண்டளவில், வெளிநாட்டு வள இடைவெளி சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு போதுமானதாக இருக்காது. கடந்த வருட அனுபவத்தின்படி அதற்கு 5,018 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் எந்த அரசாங்கமும் இந்த நிதியை ஈடுசெய்ய வேண்டும். அதற்காக சர்வதேச நாணய நிதியம் 663 மில்லியன் டொலர்களை நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் வழங்க இணங்கியுள்ளது. அதன்போது, வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுசெய்ய சர்வதேச நாணய நிதியம் 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. உலக வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பின் கீழ் 3,655 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் நிவாரணம் கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற ரீதியில் உடன்பாடு தெரிவித்துள்ள உடன்படிக்கையின் பிரகாரம் ஆட்சிக்கு வர எதிர்பார்க்கும் தரப்பினர்கள் செயற்படுவார்களா? இல்லையா? என்பதை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். அதன்படி, சர்வதேச ஒத்துழைப்பை எதிர்பார்க்காத எந்த ஒருவருக்கும் நாட்டின் எதிர்கால வரவு - செலவுத் திட்டத்திற்கு வேறு மாற்றுவழி கிடையாது என்பதைக் கூற வேண்டும்.”– என்றார்.

## அதிகாரப் பகிர்வு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எங்களுடைய மக்கள் தூரிய நோக்கோடு எதிர்பார்க்கின்ற அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசாமல், அதைக் குறித்து வாக்குறுதிகளைக் கொடுக்காமல் வேறு விடயங்களைச் சொல்லுவது அதிகாரப் பகிர்வைப் பற்றி சொல்லுவதிலேயிருந்து தப்பியோடுகின்ற விடயமாக எங்களுடைய மக்கள் கருதுவார்கள் என்பதை அவருக்குத் தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கின்றோம்.

ஆகையினாலே மற்ற எல்லா நல்ல விடயங்களையும் பற்றிச் சொல்லுகின்றபோது அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அவருடைய நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக எங்களுடைய மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் விபரமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கின்றோம்.

இதற்கு அவர் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் அவை அனைத்தும் வரும் என்றும், முன்கூட்டியே இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டு தேர்தல் அறிக்கையில் வரும் என்றும் சொல்லியிருக்கின்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் சொன்ன விடயங்களை வைத்துத்தான் அவருக்கு நாங்கள் ஆதரவளிக்கும் தீர்மானங்களை எடுத்திருந்தோம்.

அதனை அவருக்கு இப்போது மீளவும் ஞாபகமூட்டினோம். அப்படி நாங்கள் ஒரு தீர்மானத்தை அன்று எடுத்த பின்னர்தான் எமது மக்கள் சஜித் பிரேமதாஸவுக்குப் பெரிவாரியாக வாக்களித்திருந்தார்கள்.

ஆகையினால் அவர் கொடுக்கின்ற வாக்குறுதி எங்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் சொல்ல வேண்டும். அதை வைத்துத்தான் நாங்கள் எங்கள் தீர்மானங்களை எடுப்போம் என்பதை அவரிடம் திடமாகச் சொல்லி அனுப்பிருக்கின்றோம்.

நாளை (இன்று) ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எங்களை வந்து சந்திக்க இருக்கின்றார். இதில் ஒரு விடயத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும்.

அதாவது ஜேவிபியினருடனான சந்திப்பு முற்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பாகும். அதேநேரம் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பு என்பது அதற்குப் பிறகு ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பாகும். ஆனால், இது முதல் நடக்கின்றது. அது பிறகு நடக்கவுள்ளது.” – என்றார்.

இதன்போது, ”எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஆதரவு வழங்குமாறு வெளிப்படையாகச் சஜித் பிரேமதாஸ உங்களிடம் கோரிக்கை விடுத்தாரா?“ – என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்.

“எங்கள் ஆதரவு வேண்டும் என்று அவர் நேரடியாகக் கேட்கவில்லை. ஆனால், அவர் வந்து எங்களைச் சந்தித்ததும், எம்முடன் நடத்திய பேச்சுகளும் அப்படியானதாகத் தான் இருந்தது.” – என்றார் சுமந்திரன் எம்.பி.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சரியான நிலைப்பாட்டில் சஜித்

13 ஆவது அரசமைப்புத்திருத்தம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை யாழ்ப்பாணத்தில் வைத்து ஓரளவு தெளிவுபடுத்தியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் இருப்பதை அப்படியே தருவேன் என்று அவர் நேற்றிரவு உறுதிப்படுத்தி இருக்கின்றமை வரவேற்கத்தக்கது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் சட்டமாகி இப்போது 36 ஆண்டுகளாகின்றன. 13 ஆவது திருத்தம் என்பது அரசமைப்பின் பிற்சேர்க்கை அல்ல. அது அரசமைப்புச் சட்டத்தின் உள்ளடக்கம். பிரதான பகுதி. ஆனால், அதில் உள்ள முக்கிய அதிகாரப் பகிர்வுகளை நடைமுறைப்படுத்த மாறி மாறி வந்த பௌத்த - சிங்கள அரசுகள் மறுத்து வருகின்றன.

அப்படி மறுப்பது முழு - அப்பட்டமான - அரசமைப்பு மீறல். அப்படி மீறுவது ஒருவகையில் தேசத்துரோகக் குற்றமும் கூட.

ஆனால் நாட்டில் புரையோடி போயிருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்கின் கீழ் இந்த அரசமைப்பை மீறும் தேச துரோகம் மறுவழமாக, 'தேசத் தியாகமாகவும்', 'தேசப்பற்றுச் செயற்பாடாகவும்' சிங்களத்தினால் போற்றப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழான பொலிஸ் அதிகாரத்தைத் தரவே முடியாது என்று அடம் பிடிக்கின்றார் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அது மாத்திரமல்ல, அந்தத் திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதாயின், அதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்று ஒரு புதிய அரசியல் பாடத்தையும் நாட்டு மக்களுக்கு அவர் படிப்பிக்கின்றார். அரசமைப்பில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என்ற தமது கருத்தின் மூலம் இந்த நாட்டு மக்களை முட்டாள்கள் என கருதுகின்றார் போலும் ஜனாதிபதி.

அது மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 13 இன் நடைமுறையாக்கம் என்று கூறினாலும், அதிலும் பொலிஸ் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறாது, அதை சஜித் திடமே உறுதிப்படுத்திப் பாருங்கள் என்று யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறிவிட்டுத் தான் சென்றிருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதற்கே இப்போது சரியான பதிலை நேற்று இலங்கை தமிழரசுக் கட்சியினருடன் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் பகிரங்கமாகத் தெளிவுபடுத்தி இருக்கின்றார் சஜித் பிரேமதாஸ.

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ளவற்றை அப்படியே நடைமுறைப்படுத்த நான் தயார் - கொஞ்சமும் கூட்டாமலும் கொஞ்சமும் குறைக்காமலும்!" என்ற சஜித்தின் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையற்று சஜித் தொடர்பில் எழுப்பிய சந்தேகத்துக்கு நல்லதொரு பதில் விளக்கம் என்றும் கருதலாம்.

எது, எப்படி என்றாலும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாகத் தமது நிலைப்பாடு யாது என்பதை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2019 ஜனாதிபதி தேர்தலின் போதும், தமது தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் சஜித் பிரேமதாஸ தெளிவுபடுத்தி இருந்தார்.

தமிழர் தாயகம் மட்டுமல்லாமல், சிறுபான்மையினர் வாழும் பிரதேசம் எங்கும் - வடக்குக் கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் வாழும் பகுதி எங்கும் அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு - வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மை மக்கள் அனைவரும் - ஒன்றுபட்டு அங்கீகாரம் வழங்கியிருந்தனர். அதுதான் கடந்த ஜனாதிபதி தேர்தலின் பெறுபேறு.

அந்தத் தேர்தலின் விஞ்ஞாபனத்தில் தமிழர்களுக்கான அதிகார பரவலாக்கல் தொடர்பில் தான் குறிப்பிட்டவற்றுக்கு குறைந்தவையாக இந்தத் தடவை அவரின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைய முடியாது; அமையக்கூடாது.

அந்தப் பின்புலத்தில் 13வது திருத்தம் தொடர்பில் அவரின் தற்போதைய தெளிவுபடுத்தல் வரவேற்கத்தக்கது.



# மோடி தலைமையிலான அமைச்சரவை; அமைச்சர்களுக்கான துறைகள் ஒதுக்கீடு

## அமித் ஷா, ராஜ்நாத், நிர்மலாவுக்கு மாற்றமில்லை; நட்டாவுக்கு சுகாதாரம்

பிரதமர் மோடி தலைமையிலான புதிய மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களுக்கான துறைகள் ஒதுக்கீடு விவரம் நேற்று அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

அமித் ஷா, ராஜ்நாத் சிங், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் ரமேஷ் ஆகியோரின் துறைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை.

முழு விவரம் வருமாறு,

பிரதமர் மோடி – மத்திய பணியாளர், அணுசக்தி துறை, விண்வெளி துறை, ராஜ்நாத் சிங் – பாதுகாப்புத் துறை, அமித் ஷா – உள்துறை, நிதின் கட்கரி – மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை, ஜெ.பி.நட்டா – சுகாதாரத் துறை, சிவராஜ் சிங் சவுகான் – வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் துறை, நிர்மலா சீதாராமன் – நிதித் துறை, எஸ்.ஜெய்ஷங்கர் – வெளியுறவுத் துறை, மனோகர் லால் கட்டார் – வீட்டுவசதி மற்றும் மின் துறை, ஹெச்.டி.குமாரசாமி – கனரக தொழில் துறை, பியூஷ் கோயல் – தொழில் மற்றும் வர்த்தகத் துறை, தர்மேந்திர பிரதான் – கல்வித் துறை, ஜித்தன் ராம் மாஞ்சி – குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை, ராஜீவ் ரஞ்சன் சிங் – பஞ்சாயத்து ராஜ் மற்றும் மீன்வளம் மற்றும் பால்வளத் துறை, சர்பானந்த சோனோவால் – துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து துறை, வீரேந்திர குமார் – சமூக நீதித் துறை, ராம்மோகன் நாயுடு – விமானப் போக்குவரத்து துறை, பிரகலாத் ஜோஷி – நுகர்வோர் விவகாரங்கள், உணவுத் துறை, ஜுவல் ஓரம் – பழங்குடியினர் நலத் துறை, கிரிராஜ் சிங் – ஜவுளித்துறை, அஷ்விணி வைஷ்ணவ் – ரயில்வே துறை, பூபேந்திர யாதவ் – சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் துறை, ஜோதிராதித்ய சிந்தியா – தகவல் தொழில்நுட்பத் துறை, கஜேந்திரசிங் ஷெகாவத் – சுற்றுலா மற்றும் கலாச்சார துறை, கிரண் ரிஜிஜு – நாடாளுமன்ற விவகாரங்கள் துறை மற்றும் சிறுபான்மையினர் விவகாரத்துறை, அன்னபூர்ண தேவி – பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை, ஹர்தீப் சிங் புரி – பெட்ரோலியத் துறை, மன்சுக் மாண்டவியா – தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் இளைஞர் நலன் துறை, கிஷன் ரெட்டி – நிலக்கரி மற்றும் சுரங்கள் துறை, சிராக் பாஸ்வான் – உணவு பதப்படுத்துதல் துறை, சி.ஆர். பாட்டீல் – ஜல் சக்தி துறை, இணை அமைச்சர்கள் (தனி பொறுப்பு) விவரம்: இந்தர்ஜித் சிங் – புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க இணை அமைச்சர் (தனி பொறுப்பு) திட்டங்கள் இணை அமைச்சர் (தனி பொறுப்பு) பெருநிறுவன விவகாரங்கள் இணை அமைச்சர்

# இந்திய மக்களவையின் சபாநாயகராக என்.டி. ராமராவின் மகளுக்கு வாய்ப்பு



இந்தியாவின் மக்களவை சபாநாயகராக ஆந்திராவின் ராஜமுந்திரி பாரதீய ஜனதாக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டகுபதி புரந்தேஸ்வரி தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திராவின் முன்னாள் முதல்வர் என்.டி. ராமாராவின் மகளான டகுபதி புரந்தேஸ்வரிக்கு அமைச்சரவை பொறுப்பு வழங்கப்படாததால் மக்களவை சபாநாயகராக அவர் தெரிவாக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இருப்பினும், சபாநாயகர் பதவி தொடர்பில் ஆளும் கூட்டணியின் முக்கிய தலைவர்களான சந்திரபாபு நாயுடு மற்றும் நிதிஸ்குமார் ஆகியோர் நிபந்தனைகளை முன்வைத்தனர் என வெளியான தகவலின்படி, மக்களவை சபாநாயகர் குறித்து முடிவு செய்ய கூட்டணிக் கட்சிகளுடன் பாரதிய ஜனதாக்கட்சி நாளை ஆலோசனை நடத்த உள்ளது.

இதன்போது, மாற்றங்கள் ஏதும் நடக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். புதிய மக்களவையின் முதல் கூட்டம் வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரான்ஸ் நாடாளுமன்றத்தை கலைத்தார் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன்





பிரான்ஸ் ஜனாதிபதிக்கு இம்மானுவேல் மக்ரோன் அந்த நாட்டு நாடாளுமன்றத்தை கலைத்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக அறிவித்த அவர், ஜூன் 30 மற்றும் ஜூலை 7ஆம் திகதிகளில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

பரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு சில வாரங்களுக்கு முன்னர் இரண்டு சுற்றுகளாக வாக்குப்பதிவு நடத்தப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய தேர்தலில் தீவிர வலதுசாரிகளால் அவரது கட்சி படுதோல்வி அடைந்ததை அடுத்து, இம்மானுவேல் மக்ரோன் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

தீவிர வலதுசாரி தேசிய பேரணி கட்சியின் ஆதரவாளர்கள், ஐரோப்பிய ஒன்றிய தேர்தல்களில் பெற்ற வெற்றியால் உற்சாக மடைந்து, பிரான்சின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர் என தெரிவிக்கப்படுகின்றது.

# இஸ்ரேலிய பாதுகாப்புதுறையின் அமைச்சர் இராஜினாமா செய்தார்

இஸ்ரேலிய பாதுகாப்புதுறையின் போருக்கான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பென்னி கன்ட்ஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

காசாவில் ஹமாசுக்கு எதிரான போரில் உண்மையான வெற்றியை நோக்கி முன்னேறுவதை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தடுக்கின்றார் எனவும் அதனால்தான், தான் தனது பதவியை இராஜினாமா செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அமைச்சர் பென்னி கன்ட்ஸ்வை பதிவி விலக வேண்டாம் எனவும், போரை கைவிடுவதற்கான நேரம் இதுவல்ல. படைகள் சேர வேண்டிய நேரம் இது என பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கேட்டுக்கொண்டுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், இந்த அமைச்சரின் பதவி விலகல், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு பின்னடைவாக அமையும் என குறிப்பிடப்படுகின்றது.

பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைப்பினர் கட்டுப்பாட்டில் உள்ள காசா மீது இஸ்ரேல் படையினர் கடந்த 8 மாதங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்தை நெருங்குகிறது.

இந்த நிலையில், போரை உடனே நிறுத்த வேண்டும் என சர்வதேச நாடுகளும் கோரிக்கை விடுத்து வரும் நிலையில்,



இஸ்ரேல் அதனை நிராகரித்து வருகிறது.

ஹமாஸை அழிக்கும் வரை போரை நிறுத்தப்போவதில்லை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு உறுதியாக உள்ளார்.

தொடர்ந்து நீடித்து வரும் இந்த போரால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கும், பாதுகாப்புதுறையின் போருக்கான அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் பென்னி கன்ட்ஸ் இடையே சலசலப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையிலேயே அவர்தனது பதவியை இராஜினாமாசெய்துள்ளார் என குறிப்பிடத்தக்கது.


# பெல்ஜியம் பிரதமர் பதவி விலகல், கண்ணீருடன் விடைபெற்று சென்றார்

பெல்ஜியம் நாட்டின் பிரதமராக இருந்த அலெக்சாண்டர் டி குரூ பதவி விலகியுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தேசிய மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற தேர்தலில் தனது கட்சி படுதோல்வி அடைந்ததையொட்டி அவர் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

“தேர்தல் பிரசாரத்தில் நான் முக்கிய தலைவராக இருந்தேன். இது நான் எதிர்பாராத முடிவு. எனவே தோல்விக்கு நானே பொறுப்பேற்கிறேன்” என பெல்ஜியம் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், “எங்களுக்கு இது மிகவும் கடினமான மாலை. நாங்கள் தோற்றோம். நாளை முதல் நான் பிரதமர் பதவி விலகல் செய்வேன்” என்று ஞாயிற்றுக்கிழமை தனது ஆதரவாளர்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.



மேலும், அவர் தனது பதவி விலகல் முடிவை அறிவிக்கும் போது கண்ணீர் விட்டு அழுதார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மஸ்கெலியா புனித சூசையப்பர் ஆலயத்தின் பொன் விழா கடந்த சனியன்று அனுஷ்டிப்பு

மஸ்கெலியா புனித சூசையப்பர் ஆலய பொன் விழா கடந்த சனிக்கிழமை மிகவும் சிறப்பாக மஸ்கெலியா புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை கப்ரியேல் குணசேகரன் அடிகளாரின் தலைமைத்துவத்தில் இடம்பெற்றது.

வரலாற்று சிறப்புமிக்க மஸ்கெலியா புனித சூசையப்பர் ஆலயம் 129 வருடங்களை கடந்து மவுசாக்கலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்ட பின் நீரில் மூழ்கிய ஆலயம். அதற்கு பின் புதிய ஆலயம் 1971 ஆம் ஆண்டு தற்போது இருக்கும் இடத்தில் தற்காலிக கொட்டகையில் அமைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கத்தோலிக்க மக்களின் இறை நம்பிக்கையில் கண்டி மறை மாவட்ட ஆயர்கள், பங்கு தந்தையர்கள் மற்றும் மக்களின் தொடர் முயற்சியால் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது.

கடந்த 2011 ஆம் ஆண்டு மீள் நிர்மாணிக்கப்பட்டு வைபவ ரீதியாக கத்தோலிக்க மக்கள் வழிப்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இத் திருச்சபை அக் காலத்தில் ஹட்டன் பங்குடன்தான் இயங்கி வந்தது. மக்களின் ஆன்மீக தேவைகளை அறிந்து 1974 ஆம் கண்டி மறை மாவட்ட ஆயர் தனிப் பங்காக இதனைத் திருநிலைப் படுத்தினார்.

ஆலய நிர்மாணிக்கபட்டும், தனிப் பங்காகியும் இரு பொன் விழாக்களை மஸ்கெலியா புனித சூசையப்பர் ஆலயம் தன் பங்கு மக்களுடன் இணைந்து கடந்த சனியன்று கொண்டாடியது.

பொன் விழா விசேட திருப்பலி மற்றும் நிகழ்வில் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

குரு முதல்வர் அருட் தந்தை எல்வின், அருட் தந்தையர்கள், முன்னாள் பங்கு தந்தையர்கள்,அருட் சகோதரிகள்,பங்கு மக்கள், மஸ்கெலியா மக்கள் மற்றும் பல பிரதேசங்களில் இருந்தும் வந்த மக்கள் இதில் கலந்து கொண்டனர் குறிப்பிடத்தக்கது.

# ரயில் சாரதிகள் சிலர் முன்னெடுத்த பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

ரயில் சாரதிகள் சிலர் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகள் நியாயமானவை எனப் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகள் இதன்போது ஏற்றுக்கொண்டுள்ளனர் என லொகோமோட்டிவ் ஒப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி.எம்.சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வு தொடர்பான ஆவணங்களை விநியோகிப்பதற்கும் ஆள்சேர்ப்புப் தொடர்பில் அடுத்த வாரம் மீண்டும் கலந்துரையாடவும் இதன்போது இணக்கம் காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரயில் சாரதிகள் சிலர் கடந்த வியாழக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்திருந்தனர்.

சம்பளப் பிரச்சினை, பதவி உயர்வு வழங்கப்படாமை, ஆள்சேர்ப்பு செய்யப்படாமை உள்ளிட்ட காரணிகளை



முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நேற்று 20 அலுவலக ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

ரயில் சாரதிகளின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டமையை அடுத்து ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.



# திருமலை சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்புக்கு மக்கள் எதிர்ப்பு!

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப் பதற்கு கடந்த சனிக்கிழமை பாறை உடைப்பு இயந்திரத்துடன் வந்து வேலை களை ஆரம்பிக்க முயன்ற போது அப்பகுதி மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஆனால் உடைப்பு இயந்திரம் அப் பகுதியில் இருந்து இன்னும் அகற் றப்படவில்லை. இவ்விடயம் சம்மந் தமாக சேனையூர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொலிஸில் தாம் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அப்பகுதியில் மக்கள் கூடி நின்றனர். அவர்க கருத்து தெரிவிக் கையில் –

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக எமது வாழ்வாதரத் தினை அழித்தொழிக்கும் நடவடிக் கையை உடன் நிறுத்த வேண்டும். எமது வாழ்வாதாரத்தொ பாதிக்கும் வகையில் மலைகளை உடைப்பதற்கு அனுமதி வழக்கியது யார்? – என்று கேள்வி எழுப்பினர்.

சேனையூர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கருத்துத் தெரிவிக் கையில் –

நாளாந்தம் கூலித் தொழிலையும், நெற்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதார முயற்சிகளையும் நம்பி வாழ்ந்து வரும் மக்கள்தான் இப்பகுதியில் இருக்கின்றனர்.

குளம், வயல், காடு போன்ற வளங் களையே நம்பி இந்த மக்கள் வாழ்கின் றனர். மலையைச் சூழவுள்ள வயல்கள், மேய்ச்சல் தரை, இயற்கைக் காட்டு வளம் என்பன கல்லுடைப்பால் அழிவு றும் அபாயம் ஏற்படும். – என்றார்.

இந்த மலையில் இந்து வழிபாட்டு அடையாளங்களும் காணப்படு கின் றமை குறிப்பிடத்தக்கது.





### செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினால்

# இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் முல்லை மல்லாவி ஆஸ்பத்திரிக்கு!

(விஷ்ணுதாசன் ஜெனன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பயன்பாட்டிற்கான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கனடா செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினால் நேற்று முன்தினன் ஞாயிற்று கிழமை மாலை வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு மல்லாவி ஆதார வைத்தியசாலையின் சிறுநீரக சிகிச்சை பிரிவு கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் 33 லட்சத்து 67 ஆயிரம் ரூபா செலவில் இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் பி.எச்.எஸ். தேஷாஞ்ஜலி மற்றும் யாழ் போதனா வைத்தியசாலையின் சிறுநீரக மருத்துவ ஆலோசகர் வைத்தியர் பிரம்மா.ஆர். தங்கராசா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கையளிப்பு நிகழ்வில் செந்தில் குமரன் நிவாரண நிதிய பொறுப்பாளர் அவற்றை வழங்கி வைத்தார்.

மேலும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரன, சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.உமாஷங்கர், செந்தில்குமரன் நிவாரண நிறுவன ஸ்தாபகர் டி. செந்தில்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் முன்னைநாள் மல்லாவி வைத்திய அதிகாரிகள், மாவட்ட வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், சமூக சேவகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்லும்போது முற்போக்கு சிந்தனையுடைய இளம் தலைமுறை அவசியம்

## ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு, முற்போக்கு சிந்தனை கொண்ட இளைஞர் சமூகம் அவசியம் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் 05 ஆவது இளைஞர் நாடாளுமன்றத்தின் 06 ஆவது அமர்வின் இரண்டாம் நாள், விசேட அதிதியாக கலந்துகொண்ட போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் ஐந்தாவது இளைஞர் நாடாளுமன்றத்தின் ஆறாவது அமர்வு ஜுன் 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் ஜனாதிபதி செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குணரத்ன ஆகியோர் முதல் நாள் அமர்வின் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இரண்டாம் நாள் அமர்வின் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குணரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாட்டில் நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிரந்தர பொருளாதார கொள்கையின் அவசியத்தை சுட்டிக்காட்டி, உத்தேச பொருளாதார மாற்ற சட்டமூலம் மற்றும் இலங்கையின் தேசிய இளைஞர் கொள்கையை தற்காலத்திற்கு ஏற்றவாறு உருவாக்குவது என்ற தலைப்புகள் இந்த அமர்வின் கலந்துரையாடப்பட்டன.

இளைஞர் நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முதல் நாள் அமர்வில், அறுபத்தி இரண்டு உறுப்பினர்களும், இரண்டாவது நாள் அமர்வில் எழுபத்தி ஒன்பது உறுப்பினர்களும், பங்கேற்றனர்.

இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு பதில்களை வழங்கிய சாகல ரத்நாயக்க, இளைஞர் நாடாளுமன்றத்தில் சிறப்பான பங்குபற்றுதலுக்காக உறுப்பினர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்விலும் இணைந்து கொண்டார்.

இதன்போது சாகல ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில் –

“இன்றைய அமர்வில் இளைஞர் கொள்கை மற்றும் பொருளாதார மாற்ற சட்டம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இளைஞர்களின் எதிர்காலத்திற்காக நாட்டில் புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார். 197/879 இல் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையே நாம் இந்த நாட்டில் கடைசியாக கண்ட புதிய பொருளாதாரமாகும். அதன்பிறகு, பொருளாதாரக் கொள்கைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், முற்றிலும் புதிய பொருளாதாரம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, ஒரு நாடாக நாம் போட்டியை எதிர்கொண்டு வேகமாக முன்னேற முடியவில்லை.

தொடர்ச்சி▼











# புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்லும்போது முற்போக்கு சிந்தனையுடைய இளம் தலைமுறை அவசியம்






தொடர்ச்சி▲

மேலும் நமது பொருளாதாரம் அரசியல் தாக்கங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும், எங்கள் சிறு குழந்தைகளின் சிந்தனை மனப்பான்மை பாதிக்கப்பட்டது. ஒரு புதிய பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதில், இளைஞர்களின் முற்போக்கான சிந்தனையும் அதனுடன் இணைந்து மேம்படுத்தப்பட வேண்டும். பிள்ளைகளின் கல்வி, அறிவு, பயிற்சி ஆகியவற்றை வளர்க்கவில்லை என்றால், எத்தனை பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டு வந்தாலும், அதனால்



பலன் பெற முடியாது.

ஜனாதிபதியும் இதனை ஒவ்வொரு தடவையும் சுட்டிக்காட்டுகின்றார். நாம் நகர்ந்து கொண்டிருக்கும் புதிய பொருளாதாரத்திற்குத் தேவையான பயிற்சிகளை இப்போதிருந்தே பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அதற்கு மனதை தயார்படுத்த வேண்டும். பிற்போக்கு சிந்தனைகளையும் பழைய எண்ணங்களையும் மாற்ற வேண்டும். நல்லவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பலவீனமானவற்றை விட்டு விட வேண்டும். மேலும், புதிய திட்டத்தில் நல்ல விடயங்களை மாத்திரம் எடுத்து விட்டு, பலவீனமானவற்றை விட்டுவிட வேண்டும். எனவே புதிய சட்டங்களை கொண்டு வருவதுடன் இளைஞர்களின் மேம்பாட்டிற்கும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றமையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.” – என்றார்.

# நாட்டில் அதிகரித்த முட்டை உற்பத்தி

இலங்கையில் மாதாந்த முட்டை உற்பத்தி 5 முதல் 6 லட்சம் வரை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எச்.எம்.பி.ஆர் அழககோன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மாதாந்த முட்டை நுகர்வு, சுமார் ஒரு மில்லியனால் அதிகரித்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பம்

கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் உள்வாங்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் நேற்று பிற்பகல் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியதையடுத்து, சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம் பித்துள்ளனர்.



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜெயசங்கரைச் சந்தித்துப் பேச்சு

புதுடில்லி சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மீண்டும் இந்திய வெளிவிவகார அமைச்சராக நியமனம் எறும் கலாநிதி எஸ்.ஜெயசங்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இந்திய முதலீட்டில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிப்பது குறித்து இதன் போது ஆராயப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடுகளை ஆராய்வதற்காக விரைவில் தாம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார் என ஜெயசங்கர் தெரிவித்தார்.

அண்டை நாடுகளுக்கு முதலிடம் கொடுக்கும் இந்தியாவின் கொள்கை குறித்தும் இந்த சந்திப்பில் கருத்துப் பரிமாறப்பட்டன.

திருகோணமலையை மையமாக கொண்டு இந்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட இருக்கும் கைத்தொழில் வலயம் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டதோடு பல இந்திய முதலீட்டாளர்கள் அங்கு தமது முதலீட்டுகளை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் இந்தத் தொழில் வலயத்தில் இந்தியாவைத் தவிர ஏனைய நாடுகளின் முதலீட்டாளர்களையும் முதலீடு செய்வதற்கு இணைத்துக் கொள்ள எதிர்பார்கின்றோம் எனவும் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பொருளாதார மாற்றச் சட்டத்தின் மூலம் விவசாயம், சுகாதார கல்வி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் ஆகிய துறைகளின் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவுள்ளன எனக் குறிப்பிட்டார்.

அத்தோடு உண்மை மற்றும் நல்லிணக்கச் சட்ட மூலம் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையில் செயற்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இரு நாட்டு மீனவர்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் விரைவான தீர்மானத்தை எட்டுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

தோட்ட லயன் அறைகள், தோட்ட கிராமங்களாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் எனவும், அது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தலையீட்டின் மூலம் அந்தந்த கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். எதிர்வரும் காலங்களில் இலங் கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது தொடர்பாகவும் ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுகா செனவிரத்ன, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா மற்றும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தரமற்ற சவர்க்காரப் பயன்பாடு தொடர்பில் குடும்ப நலச் சேவைகள் சங்கம் எச்சரிக்கை

தரமற்ற சவர்க்காரங்களைப் பயன்படுத்துவதால் குழந்தைகளின் தோலில் பல்வேறு ஒவ்வாமைகள் ஏற்படுகின்றன என அரசாங்க குடும்ப நலச் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிராமப் பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் அதிகளவில் பதிவாகி வருகின்றன என அதன் தலைவி தேவிகா கொடித்துவக்கு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வீட்டுக் கைத்தொழில்கள் ஊடாகப் பல்வேறு தரப்பினர் சவர்க்கார தயாரிப்பில் ஈடுபட்டுள்ளமையுடன், இவ்வாறு தயாரிக்கப்படும் சவர்க்காரங்களின் தரம் தொடர்பில் சந்தேகங்கள் நிலவுவதாகம் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இவ்வாறான சவர்க்காரங்களைத் தவிர்த்து குழந்தைகளுக்காக பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படும், தரமான சவர்க்காரங்களைப் பயன்படுத்துமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.





# தோட்டத் தொழிலாளர்கள் சம்பளத்தை ஏற்க மறுப்பு

பெருந்தோட்ட நிறுவனங்கள் சிலவற்றின் தொழிலாளர்கள், நேற்று தமக்கு வழங்கப்பட்ட மாதாந்த சம்பளத்தை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைவாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த மொத்த வேதனம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை மாதாந்த சம்பளத்தில் உள்ளடக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதுளை மற்றும் ஹப்புத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சில பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சம்பளத்தை பெற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், சில பெருந்தோட்டங்களில் நேற்று சம்பளம் வழங்குவதற்காகச் சென்றிருந்த தோட்ட முகாமையாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# வெள்ளத்தை ஏற்படுத்தும் அனைத்து அனுமதியற்ற கட்டுமானங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை

கொழும்பின் புறநகர் பகுதிகளில் வெள்ளத்தை ஏற்படுத்தும் அனைத்து அனுமதியற்ற கட்டுமானங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்த அமைச்சின் செயலாளர் டபிள்யு.எஸ்.சத்யானந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை இரண்டு வாரங்களுக்குள் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் தற்போதுள்ள ஈரநிலங்களை பாதுகாப்பதன் மூலம் வெள்ளத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யு.எஸ்.சத்யானந்தா குறிப்பிட்டுள்ளார்.



# முன்பள்ளி ஆசிரியைகளின் கொடுப்பனவு அதிகரிப்பு

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான 2,500 ரூபா கொடுப்பனவை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற அமைச் சரவை உபகுழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய முன்பள்ளி ஆசிரியைகளின் கொடுப்பனவை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் முன்பள்ளி ஆசிரியப் பணியில் சுமார் 34 ஆயிரம் பேர் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள்களுடன் மூன்று சந்கேநபர்கள் கைது

கெஸ்பாவ பகுதியில் சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருளுடன் 3 சந்கேநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 13 கிலோ 106 கிராம் ஹெரோயின், 164 கிராம் ஹஷீஸ் போதைப்பொருள், 2 கைத்துப் பாக்கிகள் மற்றும் 2 கார்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

துபாயில் தலைமறைவாகியுள்ள போதைப்பொருள் கடத்தல்காரரும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவருமான 'அஹுங்கல்லே லொக்கு பெட்டி' உடன் இணைந்து செயற்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீரவில, பாதுக்க மற்றும் கல்கிஸை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.



# துப்பாக்கிச்சூட்டில் வர்த்தகர் உயிரிழப்பு

ஹுங்கம – ரத்ன பகுதியிலுள்ள திஸ்ஸ வீதி பகுதியில் துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்கான வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவர் வீட்டின் பின்புறத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வர்த்தகர் வீழ்ந்திருந்த இடத்திற்கு அருகிலேயே அவருக்கு சொந்தமான துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

51 வயதான வர்த்தகர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.06.2024


மேஷம்

இன்று சுமாரான செயல்களே நடைபெறும் சூழ்நிலை காணப்படும். உங்களுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பலன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.


ரிஷபம்

இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமின்றி செயலாற்றினால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


மிதுனம்

உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.


கடகம்

உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள். இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.


சிம்மம்

இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கையும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந்தது.


கன்னி

இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.

இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


துலாம்

இன்று வெற்றி காண்பதற்கு சாதகமான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


விருச்சிகம்

இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11-06.2024

## தனுசு

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செயலாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது.

## கும்பம்

இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயனளிக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.

## மகரம்

இன்று பக்குவமாகவும் புத்திசாலித்தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

## மீனம்

இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

